உதயம்

1

531

10 MAR 1945

ந்தாமணி பப்ளிகேஷன்ஸ்

ஒரு ரகஸ்யம்!
வாழ்க்கையில் உற்சாகம் வேண்டுமானால், குடும்பத்தில் சச்சரவுகள் ஒழிய வேண்டு மானால், வனிதையின் வருத் தம் நீங்க வேண்டுமானால்,
ஏன் யோசனை, வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்யு க்கு அழுவானேன்?
K.B.R JEWELLERY
K.B.R. ஜுவல்லரி
பெரிய கடை வீதி .. கோயமுத்தூர்.
JAGADISH

சிந்தாமணி வெளியீடு 1 மூன்றாவது புத்தகம்

உதயம்

85/94

10 MAR 1945

படித்துப் பாருங்கள்

புது உலக உதயம்
சின்னஞ் சிட்டு
வேலைக்காரன்
சிலேட்டை பிச்சுவையர்
பொழுது போக்கு
தேள்கடி மருந்து
காதலின் நிலை
தெய்வ தரிசனம்
மிருத்யுலோகத்து நட்பு
வரக்வி வராக்சாமி
இன்ப நினைவு

பதிப்பாசிரியர்: S.R. சாரங்கன்.

கூட்டு ஆசிரியர்: M. C. மாணிக்கன்

சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ்
ராஜ வீதி :-: கோயமுத்தூர்

விலை 4 அணா

பி. கோதண்டராமன்

ஆக்கலும் அழித்தலும் இறைவனின் திருவிளையாடல்கள். அவனது திருவுள்ளக் குறிப்பால் உலகில் மாறி மாறி நிகழும் இவற்றிற்குப் பொருளும் ஒரு நியதியும் உண்டு.

மக்களினம் விலங்கு நிலையிலிருந்து பரிணமம் அடைய பழைய நாகரிகப் பண்புகள் சில வளர்கின்றன. அவை, அறிவும் ஆற்றலும் வாய்ந்த பெருமக்கள் சிலர் தம்முயிரையே பணயமாக வைத்துப் போராடிப் பெற்ற உரிமைகளின் பயனாக ஏற்பட்டவை. ஆதலின், அவை மக்களனைவரின் மதிப்புக்கும் உரிய விழுமிய செல்வங்களாம். நாளடைவில், மக்கட் சமூகத்தில் தோன்றி ஆக்கம் பெறும் சில தீய சக்திகள், அச்செல்வங்களுக்குக் கேடுசூழ்கின்றன. அப்போது, அச்செல்வங்களைப் பாதுகாப்பதன் பொருட்டு, இடையே எழுந்த தீய சக்திகளைப் பூண்டோடு அழிப்பது இன்றியமையாததாகிறது. ஆண்டவனே இவ்வேலையை மேற்கொண்டு தன் மானிடக் கருவிகளின் மூலமாக நிறைவேற்றி வைக்கிறான்.

மக்களின் சமூக வாழ்க்கையில் அவ்வப்போது எழும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு சில அமைப்புகளும் ஒழுங்குகளும் ஏற்படுகின்றன. நாளடைவில் காலதேச வர்த்தமானங்கள் மாறுபடும் போது, அவ்வமைப்புகளும் ஒழுங்குகளும் தக்கவாறு திருத்தமடை

168737
m 211, N4 SUD
N45

யாமல் அப்படியே நிலைத்து விடுகின்றன. அதனால் சமூக வளர்ச்சி பெரிதும் தடைபடுகின்றது. அந்த நிலையில் அவற்றைப் பலாத்காரமாகத் தாக்கி அழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. ஆண்டவனே மக்களின் மூலமாக இதையும் நடத்தி வைக்கிறான்.

காலத் தேவைகளின் காரணமாக இன்றியமையாது நிகழும் இவ் அழிவுகளுக்குப் பின், ஆக்க வேலைகள் தொடங்குகின்றன. மக்களின் ஆர்வங்கள், லட்சியங்கள், தேவைகள் இவற்றிற்கு ஏற்பப் புது அமைப்புகளும், ஒழுங்குகளும் எழுகின்றன. இதுவே இயற்கையின் நியதி; ஆண்டவன் திருவிளையாட்டல். மாறி மாறி நிகழும் இவ் ஆக்கலும் அழித்தலும் மக்களின் செயல்களே யாயினும், பின்னாலிருந்து ஆட்டுவோன், சூத்திரதாரியாக இருப்போன், ஆண்டவனே என்பதை ஆன்ம விளக்கம் பெற்ற அறிஞரே உணர்வர்.

இப்போது நிகழும் கோர அழிவு, கூடிய சீக்கிரத்தில் முடிவுற்று புது உலகமொன்று உதயமாகப் போவது உறுதி. அவ்வுலக அமைப்பு எப்படியிருக்கும்? அதில் மக்கள் எவ்விதமாக வாழ்க்கை நடத்துவர் என்ற விஷயமாக அறிஞர் கனவுகள் பல கண்டுவருகின்றனர். நல்லெண்ணமுடைய அரசியல் வாதிகள் ஏதேதோ திட்டம் வகுத்து வருகின்றனர். இவர்களுக் கிடையே, தன்னலமொன்றே கருதும் அற்பர், உளுத்துப்போன பழமைக்கு புதுவேடந் தந்து, அதன் ஆயுளை நீட்டிக்க முயலுகின்றனர். கடைசியாகக் குறித்த இவர்களின் சேட்டையால் புது உலகின் உதயம் சிறிது காலம் தடைபடலாமாயினும், இறுதியில் உண்மையும் நல்லெண்ணமுமே வெல்லும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏற்கெனவே கிழக்கு வெளுத்துவிட்டது. புது உலக உதயத்திற்குரிய அறிகுறிகள் மெல்லமெல்ல தலைகாட்டுகின்றன.

இவ்வறிகுறிகள் யாவை?

உலகுயிர்களை ஈன்ற அன்னை, தம் மக்கள்பால் உள்ள அளவற்ற கருணையால் அவர்களின் நாகரிக வாழ்க்கைக் குரிய யாவற்றையும் வரையாது வழங்கியுள்ளாள். ஆயினும், அகந்தையும் அறியாமையும் தன்னல

உணர்வும் மிகுந்த மக்கள், வாழும் வகையறியாது தம் முட் பிணங்கியும் பிரிவுற்றும் பெரிதும் அல்லலுறுகின்றனர். வாழ்க்கையை நாகரிகமாக நடத்துவதற்கு இன்றியமையாத பொருள்கள் யாவும் ஒரு சிலரின் தனியுரிமையாயிருப்பதால், பெரும்பாலோர் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க உறையுளு மின்றியும், பட்டினியாலும் நோயாலும் வருந்தியும், அறியாமை யென்னும் படு குழியில் வீழ்ந்தும் துயருறுகின்றனர். ஆண்டவனின் கருத்துக்கு மாருன இந் நிலை மாற வேண்டும். உண்டி, உடை, உறையுள், பிணியை விலக்கவும் போக்கவும் இன்றியமையாத சுகாதார வைத்திய வசதிகள், அறியாமையை ஒழிக்கும் கல்வி, கலையின்பம் நுகர்வதற்கு இன்றியமையாத ஓய்வு, அறிவாற்றலைப் பயன் படுத்துவதற்கும் நாகரிகமாக வாழ்வதற்கும் சாதனமாக வுள்ள தொழில் அல்லது வேலை இவை மக்களனைவரின் பிறப்புரிமைகளாதல் வேண்டும். இப் பிறப்புரிமைகளை அளிப்பதற்கு இன்றியமையாத பொருளாதாரத்தைப் பெருக்க, விஞ்ஞான சாத்திரமானது இவ் ஆக்க வேலையில் பயன்படுத்தப்பட வேண்டும். இம் மகா யுத்தத்தின் பயனக மக்களின் மனப்பான்மை பெரிதும் மாறியிருப்பதால், புது உலகம் அமைவதற்கு இன்றியமையாத மேலே சொன்ன நிபந்தனைகளை அறிஞரும் அரசியல் வாதிகளும், முற்போக்குடைய முதலாளிகளுங் கூட ஒப்புக் கொண்டுள்ளனர்: இது சுபசூசகமானதோர் அறிகுறியாகும்.

சட வாழ்க்கையில் ஆழ்ந்துள்ள இக்கால நாகரிக மனிதன், யாவற்றையும் தன்னிட மிருந்தே ஆக்கி, அளித்து, மறைத்து, அருளி அழிக்கும் பரமனுடன் தனக்குள்ள உண்மையான தொடர்பை மறந்து, பிரிவுற்று நிற்பதனுலேயே வாழ்க்கையில் காணும் பல இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகின்ருன். இத் துன்பங்களினின்றும் மீண்டு அழிவிலாவின்பத்தை யடைய அவன் தன் வாழ்க்கையை மீண்டும் இறைவனுடன் தொடர்பு படுத்தி அவனுணர்வில் கலந்து அவ் வுணர்விலேயே, அவன் கருவியாகவே கருமஞ் செய்ய வேண்டும். ஞானிகள் கண்ட இவ்வுண்மையை இன்று உலக அறிஞர்களும் உணர்ந்து உய்யும் வகை அறிந்து

வருகின்றனர். இதுவும் சுபசூசகமானதோர் அறிகுறியாகும்.

இன்னும் பல அறிகுறிகள் காண்கின்றன. இவையாவும் புது உலகம் உதயமாகப் போவதை நமக்கு அறிவுறுத்துகின்றன. 'உதய'த்தின் வாசகர்களாகிய நாமும் இதற்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்வோமாக.

சின்னஞ் சிட்டு

நெல்மூக்கு; கடுகுக்கண்; காற்றில் நீந்தும்
நிலவெனவே பஞ்சுடலம்; நெஞ்சம் தன்னில்
வெள்ளம்போல் புத்துணர்ச்சி; விம்மும் மூச்சில்
விடுதலையின் மென்கீதம்; விண்ணும் மண்ணும்
கொள்ளைகொள் தனிக்காதல் கொழுந் திதயம்;
கொத்தின்றிக் கூடுகட்டி வாழும் கொற்றம்
கள்ளர்தம் பயமூட்டும் செல்வம் காணா
கலைஞ்ஞானம் கண்டதடா, சின்னஞ் சிட்டு!

கணை எனவே கட்டுகளைத் துளைத்தே தூய
கதிரவனின் ஒளிதனிலே இறக்கை நனைத்து
இணையுடனே சுதந்திரத்தின் ஏற்றம் நோக்கி
எவ்விடத்தும் மனம்போல ஏகிச் சுற்றி
பணம்படைத்தோன் இவன்ஏழை என்றே பிரிக்கும்
பார்மக்கள் அறிவதனைப் பரிகசித்து
மணமிழையும் தென்றலிலே ஊஞ்ச லாடும்
மாக்கவிதை வடிவமடா சின்னஞ் சிட்டு.

"கம்பதாஸன்"

'வல்லிக் கண்ணன்'

வேலைக்காரன்.....

'தரித்திரம், இந்தச் ச்னியனை ஒழித்துக் கட்ட்லாம் என்றாலும் முடிவதில்லை. எத்தனை நாளைக்குப் பொறுப்பது?'

சந்திரசேகரன் மனம் கொதித்தது. காரணம் இல்லாமலில்லை. அவன் அப்பொழுது தான் விழித்தான். மைனரின் நோக்குக்காக காத்து நிற்கும் நடைவாசல் நாயகிபோல், காப்பி டம்ளரும் வெற்றிலைச் செல்லமும் அன்று ஆஜராயிருக்கவில்லை.

'சின்ன ஐயா'வின் திருப்தியைச் சம்பாதிக்க வேணும் என்ற விருப்பம் பெருமாளுக்கு உண்டு. ஆனால், போதிய தெம்பு கிடையாது. ஒரு காலத்தில் ஓடியாடி வேலை செய்தான். பெரிய முதலாளி - சந்திரனின் தந்தை - திருவாக்கால் 'கெட்டிக்காரன்' என்ற பெயரும் எடுத்தான். அதையே நிரந்தரமான 'சர்டிபிகேட்'டாகப் பற்றிக்கொண்டு அந்தக் குடும்பத்திலே வேரோடிவிட்டான் அவன்.

சந்திரனின் கோபம் எரிமலையின் அந்தரங்கக் குமுறலின் உச்சநிலையை எட்டிப்பிடிக்கும் வேளையிலே, பெருமாள் உள்ளே வந்தான். மெதுவாக வரும் காப்பி வகையரு சின்ன முதலாளியின் அகங்காரத்தை அதிகப்படுத்தின. அவனது அகக் கொதிப்பை முகத்திலே கண்ட பெருமாள் பணிவாக கட்டிலை நெருங்கினான். குழைவை அங்கங்களில் சித்திரித்து ஒதுங்கும் ஒரு நாயைப் போல.

'ஏன் இன்னும் ஒரு மணி கழிச்சு கொண்டு வரப்படாது? காப்பி கொண்டாறனும் காப்பி' என்று சீறினான் சந்திரன்.

'இந்த இடம் சரிப்பட்டாது. இன்றே போய்விடு. ஒரு நாளா ரெண்டு நாளா? தினமும்......' என்று கத்தினன்

பெருமாள் முழங்கையைச் சொறிந்து கொண்டே நின்றான். ஒன்றும் பேசவில்லை. சின்ன முதலாளியின் கோபக்கனல் 'காப்பித் தண்ணீர்' உள்ளே போனதும் அவிந்துவிடும் என்பது அவனுக்குத் தெரியாதா?

சந்திரன் காப்பி அருந்தி, டம்ளரை மேஜைமீது வைத்துவிட்டு கனைத்துக் கொண்டான். பிறகு 'ஏண்டா நிற்கிறே? இந்தத் தடவை கண்டிப்பு என்றால் கண்டிப்புத்தான். ஆமா, நீ போய்விட வேண்டியது தான்' என்றான்.

முதலாளியின் கோபம் ஒரு படி இறங்கியதை உணர்ந்த பெருமாள் ஆரம்பித்தான்.

'இல்லீங்க, பெரிய முதலாளி சொல்லுவாங்க. அப்போ பாருங்க......'

பெருமாள் பேச்சு அவனுக்குக் கசந்தது. 'நீயும் உன் பெரிய முதலாளியும்! சுத்த மண்டுகம்டா நீ' என்றான்.

'ஆமாங்க, பெரிய முதலாளி சொல்லுவாங்க......'

சந்திரனால் சிரிக்காமலிருக்க முடியவில்லை. 'இவனை என்ன செய்வது!' என்று கேள்வி எழுப்பியது மனம். 'தொலைகிறான், பெருங்காயப்பானை' என முணமுணத்தான்.

அவன் மனம் சமநிலை அடைந்து விட்டது என்பதை அவனது பேச்சே காட்டியது. பெருமாள் 'ஹி ஹி... உங்க புண்ணியத்திலே, என்னவோ...' என்று ஆரம்பித்தான். அவன் தொணதொணப்பை சகியாத சின்ன முதலாளி 'சரி, போய் வேலையைப் பாரு' என்றான்.

அதே வேளையில் முதலாளி மனோபாவம் முனகியது; 'இந்த வேலைக்காரனுகளே இப்படித்தான். பெரிய புதிர் தான். ஆனால் வேலைக்காரன் இல்லாமலும் ஓடவில்லையே!' என்று.

யோகி சுத்தானந்த பாரதியார்

சிலேடைப்புலி பிச்சுவையர்

கவிமாமா!

அந்தக்காலம் நான் பார்த்த புலவருள் சிலேடைப்புலி பிச்சுவையர் ஒருவர். "புலி" என்றால் பயப்படாதீர்கள். அவர் வெண்பாப்புலிதான். ஆள் எப்போதும் சிரித்த முகம், முருகனிடம் ஈடுபட்ட உள்ளம், குழந்தை போன்ற இயற்கை, சிறியவர் பெரியவர் என்னாமல் எல்லாரிடமும் தாராளமாகப் பழகும் சரளம், எப்போதும் திருப்புகழை அரைத்துக் கொண்டிருக்கும் வாய்-யாரைக் கண்டாலும் 'முருகா' என்று கும்பிடும் கைகள், இவையே பிச்சுவையர். அவருக்கு மிக்வும் பிரியமானது பணமன்று; பட்டன்று; **பாட்டுத்தான், கவிதைதான்.** பிச்சுவையர் திருவாவடுதுறை மடம் நமசிவாய தேசிகரிடம் பாடம் கேட்டவர். நன்னூல், யாப்பருங்கலம், திருமுறை நூல்க்ள் முதலியவற்றை நன்றாய் ஆராய்ந்தவர். நூலைவிட மனிதர் உள்ளத்தை ஊடுருவிப் பார்த்துச் சமயோசிதமாகப் பேசவும் பாடவும் வல்லவர். மகாவித்வான் மீனாட்சிசுந்திரம் பிள்ளை இவர் கவித் திறமையை நேரே கேட்டு மெச்சியிருக்கிறார். திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகர், இவர் திடீர் திடீரென்று எடுத்து வீசும் சிலேடை வெண் பாக்களைக் கேட்டு 'புதிய காளமேகம்' என்று போற்றினார். பிச்சுவையர் இராமநாதபுரம், சிவகங்கை, ஊற்றுமலை ஆகிய மூன்று ஜமீன்களிலும் கவிச்செங்கோல் வகித்தார்.

இவர் சிவகங்கைக்கு வரும்போது, எங்கள் வீட்டில் தங்குவதுண்டு, அல்லது எங்கள் தெருவிலேதான் தங்கு

வார். அப்போது சிறுவர்களாகிய நாங்கள் **"கவிமாமா** வந்து விட்டார்" என்று உற்சாகமாகச் செல்வோம். நல்ல நிலாவில் சரியான விருந்து நடத்தி விடவேண்டும். பிறகு இரவெல்லாம் வெண்பா மழைதான். "மாமா எனக்கொருபாட்டு, சந்தமாமாவுக்கொரு பாட்டு, கோயிலுக்கொரு பாட்டு, குளத்திற்கொரு பாட்டு" என்று கேட்போம்; உடனுடன் பாடுவார். அவர் வாக்கு சிறுவருக்கும் புரியும், வித்வான்களுக்கும் விளங்கும்...அவ்வளவு எளிதாயிருக்கும். அவர் அடிக்கடி தமது அனுபவங்களை யெல்லாம் நகை ததும்பச் சொல்வார். விசனமே இல்லாத கவி அவர் ஒருவரே.

நீர் கேட்காததுதான் பாக்கி

எங்கள் ஊரில் சங்கராச்சாரியார் வந்தார் — நரசிம்ம பாரதிகள். ஏராளமான சமாராதனைகள் நடந்தன. ஒரு நாள் நான் கவிமாமா பக்கம் உட்கார்ந்தேன். சமாராதனை லட்டு, பாயசம், வடை, அப்பளாத்துடன் வெகு விமரிசையாக நடந்தது. நல்ல பசி, பிச்சு வையர் நன்றாகச் சாப்பிட்டார். ஆனால் சமாராதனையில் தண்ணீர் சரியாகக் கேட்கவில்லை; இவருக்கு விக்கும் போலிருந்தது. சர்வாதிகாரி, 'பாயசம் எப்படி?' என்று பந்தி விசாரணை செய்து கொண்டு, கவிராயரைக் கேட்டார். "ஐயா, எல்லாம் **சோறுசோராயிருக்கிறது! நீருகேட்காததுதான் பாக்கி!"** என்று தாகமாகச் சொன்னார். சர்வாதிகாரி பிரமித்துப் போனார். "பாயசத்தில் சோறில்லையே! அது நல்ல பருப்புப் பாயசம். நிரம்ப மிந்திரி சேர்ந்ததல்லவா? ஏன் அப்படிச் சொல்லுகிறீர்? பெரியவாளுக்கு என்ன வேண்டும்?" என்றார். மறுபடியும் "நீர் கேட்காததுதான்பாக்கி" என்றார் கவி. சர்வாதிகாரிக்குப் புரியவில்லை. நான் தெரிந்து கொண்டேன். உடனே தண்ணீர் கேட்கும் பையனைக் கூவினேன். பிச்சுவையர் ஆவலாக நீர் பருகி கடகட வென்று சிரித்தார். "ஐயர் பாயசம் ஜோர் ஜோராகயிருக்கிறது. நீர் (தண்ணீர்) சரியாகக் கேட்காமல் விக்கிக்கொள்ள இருந்தது. நீர் சரியாகக்கேட்காததுதான் குறை" என்று கவிராயர் வெண்பாவை எடுத்தார். சர்வாதிகாரி மிக்க மகிழ்ச்சிகொண்டு, அன்று மாலையில் நமது தமிழ்ப் புலவரை நரசிம்ம பாரதிகள் முன்

அழைத்துச் சென்று, அறிமுகம் செய்வித்தார். புலவர் நான்கு வெண்பாக்கள் பாடி ஆசி பெற்றார். அதில் ஈற்றடி ஒன்று "**முனியாத சாந்த முனி**" என்பது.

சு-பையா வேலை

மறுநாள் சமாராதனைக்கும் கவிராயர் வந்தார். நாங்களும் மாமா பக்கத்தில் உட்கார்ந்தோம். நாங்கள் அவருக்குச் சிப்பாய்கள். என்ன வேலை வேண்டுமானாலும் செய்வோம். அன்று பெரிய லட்டு, யானை அடி அப்பளாம் எல்லாம் பரிமாறினார்கள். மாமா வாயைக் கிண்ட நாங்கள் ஏதாவது சேட்டை செய்வதுண்டு. எங்களுள் ஒரு விஷமக் குடுக்கை கவிராயர் பக்கத்தில் வாங்கி வைத்திருந்த லட்டு, அப்பளாம் இரண்டையும் இடது கையால் மெல்ல விண்டு விண்டு காலிபண்ணிக் கொண்டிருந்தான். சட்டென்று திரும்பிய மாமா "சு-பையா வேலையா செய்கிறாய்?" என்றார். நாங்கள் சிரித்தோம். "அம்பி இதற்குத்தான் சுப்பையா வேலை என்பது" என்றார். பக்கத்தில் இருந்த ரசிகர்கள் "அதென்ன வேலை விரிவாகச் சொல்லுங்கள்" என்றார்கள். மாமா "இந்தப் பயல் கேட்டால் இருக்கிற லட்டையும் சுப்பையா வேலை பண்ணிவிடுவான். சாப்பிட்ட பிறகு சொல்லுகிறேன்" என்றார். நாங்கள் வைத்திருந்த லட்டு அப்பளாங்களை மாமாவுக்கே கொடுத்தோம். "பயலே, என்னை மூட்டை தூக்கிச் சுப்பையா ஆக்காதே" என்று எல்லாம் திருப்பித் தந்தார். சாப்பாடானதும் வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே மாமா ஒரு திண்ணையில் படுத்தார். நாங்கள் "சுப்பையா கதை" என்று நகைத்தோம். மாமா கடகட வென்று சிரித்து ஆரம்பித்தார்! "நான் ஊற்றுமலை ஜமீந்தாரிடம் அடிக்கடி செல்வதுண்டு. மருதப்ப தேவர் ஒருதரம் சால்வை, தோடா எல்லாந் தந்து, ஒரு மூட்டை பணிகாரமும் கொடுத்தார். என் சிஷ்யப்பிள்ளை சுப்பையா அதைத் தூக்கிகொண்டு முன்னே நடந்தான். நான் பின் தங்கி வந்தேன். முன்னே சென்ற சுப்பையா கை மெல்ல மூட்டையைப் பதம்பார்க்கத் தொடங்கியது. கொஞ்சம் லட்டு நாக்கிற்குக் கொடுக்கவே அது கொண்டா கொண்டா என்று அரித்தது. பிள்ளையாண்டான் மூட்டையை அவிழ்த்துப் பிடிப்பிடியாக அள்ளிக் காலி

செய்து கொண்டிருந்தான். நான் வந்து விட்டேன். 'இதென்னவேலே சு—பையா' என்றேன். 'பசியும் ருசியும் சேர்ந்து செய்தவேலே' என்முன். 'சுமையை என் தலையிலே சுமத்தியதேன்?' என்று ஒரு பாட்டும் பாடிவிட்டான். 'உன் பாட்டிற்கு பட்சண மூட்டை சன்மானம்; திட்டு ராஜா' என்று சொல்லிவிட்டேன்'' என்ருர்.

யாது செய்வேன்?

பிச்சுவையரை இராமநாதபுரம் ராஜரிஷியான பாஸ்கர சேதுபதி அன்புடன் ஆதரித்தார். பாஸ்கர சேதுபதியின் அரண்மனே, புலவர் மாளிகையும் கேளிக்கையுமாயிருக்கும். சேதுபதி எதையும் குறித்த நேரத்தில் செய்பவர். நமது பிச்சுவையர் கவிக்கனவிலேயே இருப்பவர். காலம் இவருக்கு அடிமை. சேதுபதி சபைகளுக்கு இவர் சிறிது காலந்தாழ்ந்தே செல்வது வழக்கம். ஒரு நாள் இவர் வருமுன் புலவர்களுக்குச் சன்மானம் வழங்கியாயிற்று. இவரைக் கண்டதும், சேதுபதி சிலேடையாக ''யான் யாது செய்வேன்?'' என்ருர். நான் என்னசெய்வேன் நாழியாயிற்று என்பதொரு பொருள். இப்படித் தாமதமாக வரக் கூடாதென்று சரியானபடி நினைப்பில் வைக்கச் செய்கிறேன் என்பது மற்றொரு பொருள். கவிராயர் அரசர் கருத்தை அறிந்து ''யானும் யாது செய்வேன்''என்று சொன்னர்,

அரசர், வேர்புர்.

மறுதரம் சபை கூடியது. சிலேடைப்புலி பத்து நிமிஷம் கழிந்து வந்தது. அவருக்கேற்பட்ட இடத்தில் வேருெரு புலவர் இருந்தார். அரசர் ''யாது செய்தேன்'' என்று முணங்கினர். பிச்சுவையர் தடதட வென்று தலே நிமிர்ந்து அரசர் சிம்மாசனத்தின் கைப்பிடிமேற் ஜம் என்று உட்கார்ந்தார். வலதுகையை அரசன் முதுகில் போட்டுத் தழுவிக்கொண்டு புன்னகைத்தார். சபை திகைத்தது. ''என்னங்காணும் இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்குவீர் போலிருக்கிறதே'' என்று சேதுபதி சினந்தார். கவிராயர் ''அரசே யாது செய்தேன்? வேம்பு அரசைத் தழுவுதல் இயல்புதானே. நான் வேம்புத்தூர் கவி...வேறு இடமின்றி இதோ அரசைத்

தழுவிக் கொள்ளுகிறேன்" என்ருர். சேதுபதி முக மலர்ந்து. "சபாஷ்! பிச்சுவையர், நல்ல சிலேடை" என்று ஒரு வெள்ளித்தட்டு நிரம்பப் பணம் குவித்துப் பிச்சுவை யரிடம் தந்தார். பிச்சுவையர் சேதுபதியைக் கற்பகத் திற்குச் சமானமாகப் பாடிவிட்டுப் பணத்தை எடுத்துக் கொண்டு "பணத்தட்டு யாருக்கு?" என்று கேட்டார். "பணத்தட்டு" என்ருல் பணமுடை. சேதுபதியிடம் பண முடையேது. பணத்தட்டு தனக்கென்ருல் அவமானம். "பணத்தட்டும் உமக்கே இருக்கட்டும். தட்டும்போ தெல்லாம் தட்டுடன் வரும்" என்று சேதுபதி கொடுத்து மகிழ்ந்தார்.

வக்கீலும் நாயும்

ஒருதரம் பிச்சுவையர் ஒரு வழக்கிற்காகப் பெரிய வக்கிலிடம் சென்ருர். வக்கீல் கட்சிக்காரரை "செள் புள்" என்று விழுவதும், பொய்சாட்சி ஜோடிப்பது மாயிருந்தார். பார்த்தார் பிச்சுவையர். என்ன நாய்மாதிரி விழுகிருர் என்று பக்கத்தில் சொல்லிக்கொண்டே ஒரு வெண்பாப் பாடிவிட்டார். வக்கீல் இவர் பக்கம் வெகு கோபமாகத் திரும்பினுர். "என்னையா என்னை நாயாக, ஆபாசமாகப் பாடுகிறீர்; மானநஷ்டிக்குப் பிராது போடுவேன் கவனம்" என்ருர் "அண்ணு உங்கள் மூளை யையையும் வேலையையும் வியந்தல்லவா பாடினேன்"... என்ருர். "இன்னொருதரம் சொல்லும் பாட்டை" என்று வக்கில் விடைத்தார்.

"எச்சிக் கலையெடுக்கும் ஏற்றபீ ஸாப்பிடும்" என்று விளக்கினுர். எச்சிக்கலை எந்தச் சிக்கலையும் எடுக்கும். சிக்கலான விவகாரங்களையும் தீர்ப்பார். ஏற்ற பீஸ் ஆப்பிடும் அதற்கேற்ற பீசும் கிடைக்கும்...என்பது பொருள். நாய்போல் எச்சிக்கலை யெடுத்துக் கண்ட பீ சாப்பிடும் என்பது பகிரங்கப் பொருள். அங்கிருந்த வர்கள் "சபாஷ் சிலேடைப்புலி" என்று கை கொட்டி ஞர்கள். வக்கில் செருக்குத் தணிந்து கவிராயர் வழக்கை நடத்திக்கொடுத்து, நன்றிப் பாட்டும் பெற்ருர். அப் பாட்டில் "பட்டணத் தாசி பணத்தாசி" என்று கவி வக்கீலை தாசியாக்கி விட்டார். நீர் பட்டணத்து ஆசி பணத்தின் ஆசி யெல்லாம் பெறுவீர்...என்பது பொருள்.

பொழுது போக்கு

தமிழ் நாட்டுப் பெரு வள்ளல்களில் தலை சிறந்த பாரி வள்ளலைத் தமிழ் மக்களுக்கு அடிக்கடி நினைவூட்டும் நோக்கத்துடன் நான் பாரியின் பெயரை எனது புனை பெயராகக் கொண்டிருக்கிறேன். தமிழகமும் வையகமும் புது வாழ்வு பெற வேண்டுமானால் பாரியின் அற்புதமான அன்பு நெறியை, ஜீவ காருண்ய நெறியை மேற்கொள்ள வேண்டும்.

ஃ ஃ ஃ

பாரி வள்ளல் வாடி வதங்கி நின்ற ஓரறிவுயிரான சிறியதோர் முல்லைக் கொடிக்குத் தனது பொற்றேரை யீந்தான். மாரியன்ன பாரியின் கொடையையும், கருணையையும் பாடாத புலவர்கள் இல்லை. பொய்யா நாவிற் புலவரான கபிலர் பெருமானே பாரியைப் பாடும் புலவர்களில் தலைவரானவர். சங்கப் புலவர்களும், ஔவையாரும் பாரியைப் பாடி யிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

தேவாரத்திலும் திருப்புகழிலும் பாரியின் புகழ் ஏறியிருக்கிறது.

"கொடுக்கி லாதானைப் பாரியே யென்று
கூறினும் கொடுப்பார் இலை"

என்று பாரியின் கொடை வண்மையைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடுகிறார்.

ஃ ஃ ஃ

ஓரறிவுயிரான சிறிய முல்லைக்குப் பாரி வள்ளல் தனது பொற்றேரை யீந்தான்; அறிவுள்ள மக்களுக்குப்

பாரி தன் நாட்டையே யீந்தான். பாரியின் கருணையும் கொடையும் முற்காலப் பெருந்தமிழர் பெரு வாழ்வுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகின்றன.

ஃ ஃ ஃ

அக்காலத்தில் முல்லைக்குத் தேரளித்த பாரியின் பெருங் கருணையையும் தற்காலத்தில் மக்கள் என்போர் மக்கட்குச் செய்யும் கொடுமையையும் சிந்தித்தால் உலகம் எவ்வளவு மேலேயிருந்து எவ்வளவு கீழே இறங்கி யிருக்கிறதென்பது விளங்கும்.

ஃ ஃ ஃ

பாரி வள்ளல் தனது பொற்றேரை யீந்து முல்லைக் கொடியை வளர்த்தான். கற்புக்குரியதான முல்லைக்குத் தமிழ் இலக்கியத்தில் தலைமையான பெருமை அளித் திருக்கிறார்கள். முல்லைச் சிரிப்பையும் முல்லை மெல் லரிசியையும் விரும்பாதார் யார்?

முல்லைச் செடியை வீட்டு முற்றத்தில் வைத்து வளர்த்து அதன் மலரை அணிந்து கொள்வது முற் காலத்தில் தமிழ் மகளின் பண்பாயிருந்தது. ஆனால், தற்காலத் தமிழ் மகளிர் மணம் மிக்க முல்லையை விரும்ப வில்லை. மணத்தையும் குணத்தையும் அவர்கள் நாட வில்லை. மணமும் குணமுமற்ற கனகாம்பரத்தையே அவர்கள் விரும்புகிறார்கள்.

ஃ ஃ ஃ

தமிழ் மகளிரிடம் வளர்ந்து வரும் கனகாம்பர மோகம் நீங்கி, முல்லைமோகம் தோன்ற வேண்டும். வீடு தோறும் முல்லை வளர வேண்டும். வீடு தோறும் பூந் தோட்டம் நிலவ வேண்டும்.

ஃ ஃ ஃ

முற்காலத்தில் ஊர் தோறும், கோயில் தோறும் பூந்தோட்டங்கள் சிறந்து விளங்கின. இக்காலத்தில் பூந்தோட்டங்களைப் புஸ்தகங்களில் தான் பார்க்க வேண் டியதாயிருக்கிறது. செந் தமிழ் இலக்கியங்களில் காணப் படும் பூக்கள் பலவற்றை இப்பொழுது நாட்டிலே காணவில்லை.

ஃ ஃ ஃ

'பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை' யென்று அப்பர் சுவாமிகள் பாடிய தாமரை கூட மறைந்து வரு

கிறது. கமலத்தையும், பங்கஜத்தையும், பத்மாவையும், அம்புஜத்தையும் நமது பெண்களிடந்தான் காண் கிறோம். நாம் எல்லோரும் விரும்பிப் போற்றும் லக்ஷ்மி யும் ஸரஸ்வதியும் எங்கே யிருக்கிறார்கள்? திருமகள் செந்தாமரையிலும், அவள் மருமகள் வெண்டாமரையி லும் இருக்கிறார்களாம். நம்மைப் படைத்த பிரமனும் 'பூவில் வாழ் அயன்' தானே.

ஃ ஃ ஃ

நமது பெரியோர்கள், தெய்வங்களின் திருவடிகளெல் லாம் பாதாம்புஜங்கள், திருவடிக் கமலங்களாக வன்றோ திகழ்கின்றன.

ஃ ஃ ஃ

நமது பெண்களின் முகம், கண், கை, கால் எல்லாம் தாமரை தானே. "பண்கள் வாய் மிழற்றும் இன் சொல் கடைசியர் பரந்து நீண்ட கண், கை, கால், முகம் வாய் ஒக்கும் களையாகிய தாமரைப் பூக்களே கோசல நாட்டுக் கழனிகளில் மலர்ந் திருந்தமையால், மள்ளர்கள் அவற் றைப் பறியாமல் விட்டு விட்டார்கள்" என்று கம்பர் அழ காகப் பாடுகிறார்.

ஃ ஃ ஃ

"திருமுகம் கமலம், இணைவிழி கமலம்
செய்யவாய் கமலம், நித்திலம் தாழ்
வருமுலை கமலம், துணைக் கரம் கமலம்,
வலம்புரி உந்தி பொற் கமலம்,
பெருகிய அல்குல் மருமத் தடம் கமலம்
பிடிநடைத் தாள் கமலம்,
உரு அவட் கவ்வாறுதவினன் அன்றே
உயர்ந்தது பூவினுட் கமலம்

என்ற அழகிய பாடலில் தாமரை எவ்வளவு அழகாய்த் திகழ்கிறது பாருங்கள்.

ஃ ஃ ஃ

யோக நூல்கள் கூட, நமது உடம்பிலே அருதாரங் களிலே அமைந்துள்ள தாமரைப் பூக்களிலே பரமாத்மா விளங்குகிறார் என்று கூறுகின்றன.

நாலிதழ் இடையில் இருந்த வீரியனும்
நாலிரண் டிதழ் இருப்பவனும்
கோலமார் ஈரைந் திதழ் இருப்பவனும்
துவாதச கோணம் வைகினனும்
தாலின் மூலத்தில் சோட்ச இதழ்மேல்
தரித்திரண் டிதழ் பொருந்தினனும்
மேலின் ஆயிரம் பொற் கமலம் வைகினனும்
எவனவன் இருபதம் விழைவாம்.

ஃ ஃ ஃ

ஊர்தோறும் பொற்றாமரை (க்குளம்) வேண்டும். செந்தாமரையும், வெண்டாமரையும், நீலத் தாமரையும் அதில் பூக்க வேண்டும். தாமரை யிலையில் சாப்பிடலாம். தாமரை நூலும் பயன்படும். தாமரைப் பூவைச் சாமி களுக்கு அணியலாம். அதனுல் திருமகள் அருளும், கலை மகள் கருணையும், மற்றத் தெய்வங்களின் கிருபையும் ஏற்படும்.

ஃ ஃ ஃ

விவசாய நிபுணர் ஒருவர் எழுதியுள்ள புத் தகம் ஒன்றில், ஒரு விவசாயிக்குப் பத்து ஏக்கர் நிலம் இருந்தால், அதில் பத்து செண்டு அளவுள்ள தாமரைக் குளம் இருக்க வேண்டு மென்றும், தாமரை யிலைகள் வாயி லாகத் தண்ணீர் நீராவியாக மாறி வரும் பொழுது சீத ளம் உண்டாகிறதென்றும், அது நிலத்தில் உள்ள பயிர் களுக்கு நல்லதென்றும் கூறுகிறுர்.

நமது கோயில்களெல்லாம் தாமரை மயமாயிருக்கின் றன. ஆனுல் அவை கற்றாமரை! நமது உள்ளமும் தா மரைதான். நமது பெண்கள் போடும் கோலத்திலும் முத லில் போடுவது தாமரைதான். பூலோகத்து மலர்களில் சிறந்தது தாமரைப் பூவே. ஆனுல் வெண்டாமரையை யும், செந்தாமரையையும், நீலத் தாமரையையும் கண்டு மகிழும் கண்களை நாம் இழந்துவிட்டோம். நமது கண்கள் இப்பொழுது அழகார்ந்த பொருள்களில் அழகைக்காண் கின்றன. நமக்குப் பழைய கண்கள் ஏற்பட்டால், நமது தாமரை, நமது நாடு, நமது கோயில், நமது குளம், நமது விளக்கு, நமது நாகரிகம், நமது கலைகள் இவற்றி லுள்ள பெருமையையும், பேரழகையும் கண்டு மகிழும் பாக்கியம் ஏற்படும்.

கோமதி சுப்ரமணியம்,

தேள்க்கடி மருந்து

லக்ஷிமி அம்மாள் "ஐயோ ஐயையோ அம்மா" என்று திடீரெனக் கத்தினாள். கொதிக்கிற உலையை அப்படியே போட்டு விட்டு லக்ஷிமி வீட்டிற்குப் புறப்பட்டேன். அலறல் அலைகள் வேகமாகக்கேட்டன.

நான் ஓடினேன். எதிர் வீட்டு எச்சுமி, அடுத்த வீட்டு அலமு, மேலவீட்டுச் சின்னம்மா எல்லாரும் கூடி இருந்தார்கள். "என்னம்மா, தேள் கடித்தால் இப்படியா ஊர் கூட்டுவார்கள்? என்றாள்" மேலவீட்டுச் சின்னம்மா. உங்களுக்கு கடித்தால் அப்போ தெரியும். இந்தியா ஜனங்களே கூடிவிடுவார்கள்" என்று ஒருகொட்டுக் கொட்டினாள் லக்ஷிமி. "இப்படி யாரும் கத்தக்கூடாது, கத்தவும் மாட்டார்கள்" என்றாள் மறுபடியும் சின்னம்மா.

நான் "மருந்து ஏதாவது போடுங்கள்" என்றேன். மருந்து ஒவ்வொன்றாக வந்தது. நாலைந்து டஜன் கிராமபோன் பிளேட்டுகள், மாத்திரைகள், வில்லைகள், வேர்கள், உள்ளி தினுசுகள், தைல திரவ பதார்த்தங்கள் இவைகள் கூடியும் லக்ஷிமியம்மாள் ஓலத்தை நிறுத்த முடியவில்லை.

"எங்கவீட்டுக்காரர் தேள் கடிக்கு மருந்து வாங்கியிருக்கிறார்கள். அதைப் போட்டால், அரை நிமிஷத்திலே சரியாகப் போகும்" என்று மேல வீட்டுச் சின்னம்மா பெருமை அடித்துக்கொண்டாள். மேலும் "தேள் எம்மா வருது, வீட்டில் குப்பை, கூளம் இல்லாமல் சுத்தமாக இருந்தால்? இது தெரியாமல் கடித்த பிறகு ஐயோ அம்மா, என்று ஏன் கதறணும்" என்று வீடு சுத்தமாக இருக்க வேண்டியதற்கு ஒரு சவுக்குக் கொடுத்தாள்.

பிரசங்கம் செய்ய அது நேரமல்லவென்று நாங்கள் சுட்டிக் காட்டினோம். மயிலினங்கள் முன்னால் அன்னப் பேடுபோல ஒய்யாரமாக நடை போட்டபடி சின்னம் மாள் மருந்தெடுக்கப் போனாள்.

லக்ஷிமி வலி தாங்காமல் படுத்தாள். நாங்கள் வீசுவதும், காப்பி கொடுப்பதுமாக இருந்தோம். திடீரென்று மேல வீட்டுச் சின்னம்மாள் கதறினாள்; கத்தினாள்; ஓலமிட்டாள். எல்லாரும் லக்ஷிமி உள்பட சின்னம்மா வீட்டிற்குப் போனோம். "ஐயையோ...... கருந்தேள் போட்டு விட்டதே" என்று உலகமே வந்து சேரும்படி கூப்பாடு போட்டாள்.

"என்ன......தேளா?......" என்றோம் கதம்பமாக. "அந்த மாடத்தில் தேள்கடி மருந்து இருக்கு......எடுக்கப் போனேன். உள்ளே இருந்து போட்டு விட்டதேம் மா......" என்றாள்.

பாம்பு விரலைப் பிடித்துக் கொண்டு சின்னம்மா மாலை மாலையாகக் கண்ணீர் வடித்தாள். மறுபடியும் கிராமபோன் பிளேட்டுகள், மாத்திரை வில்லைகள், வேர்கள் உள்ளி தினுசுகள், தைல திரவ பதார்த்தங்கள் அந்த வீட்டுக்குள் வந்தன. சின்னம்மா ஓலம், கதறல், அழுகை நிற்கவில்லை.

லக்ஷிமி தன் வேதனையை மறந்து "என்ன சின்னம் மா, தேள்க் கடித்தால் இப்படியா ஊர் கூட்டுவார்கள்?" என்று ஒரு கொட்டுக் கொட்டினாள்.

"அவரவர்களுக்கு வந்தால் தெரியும்"

எல்லோரும் சிரித்தோம். சின்னம்மாள் பிரமாதப் படுத்திய மருந்தை எடுக்கு முன் குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி, தேளையும் அடித்தோம். மருந்தை இழைத்துப் போட்டோம். அந்த மருந்தும் பழைய கருப்பன் தான்!

குறும்புக்கார அலமு "பூனை உள்ள இடத்தில் தான் எலி பேரன், பிள்ளையோடு வாழ்கிறது!" என்றாள்.

வலி பொறுக்காத சின்னம்மாவும் சேர்ந்து சிரித் தாள்.

காதல் நிலை

S. G. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை,
(சங்கீத சாஹித்ய
வித்வான்)

—o—

நெஞ்சமெனும் தடாகத்தில் உதித்து மலர்ந்த தாமரையாகிய அன்பில் நிறைந்த தேன்போன்றது "காதல்".

இத்தகைய தெய்விகக் காதலின் முன் மற்றெவையும் துச்சமாகவே தோன்றும்.

ஊடலிற் புறஞ்சென்ற தனது ஆருயிர்க் காதலன், மீண்டும் வந்து கதவைத் தட்டுவான் என்று எதிர் நோக்கியிருக்கிருள் அரசிளங்குமரி. நள்ளிரவாகியும் அவன் வரவில்லை. ஏங்கித் தளர்கிருள்; நொந்து கொள்கிருள்; படுக்கையிற் புரள்கிருள்; நிலா முற்றம் வருகிருள். வெண்ணிலவின் தண்ணிறை கிரணம் அப்பூம்பாவையைத் தணலாயெரிக்கிறது. அண்ணாந்து சந்திரனைப் பார்க்கிருள்.

'ஏ! முழுமதியே! கடன்காரரைக் கண்டு தலை

மறைவது போல் என்னைக் கண்டு ஏன் மேகத்துள் மறைகிறாய்? வீணே என்னை வருத்த வேண்டாம். என் ஒரு மொழியைக் கேள். நம் இருவருக்கும் நலமுண்டாகும். என்னெனில், என் அன்பைக் கவர்ந்து என்னை அடிமையாகக் கொண்ட எனது காதலரைக் கண்டு கூட்டி வர உன்னால் முடியுமானால், அவரது தரிசன பலத்தால், என் வதனம் எப்படி எப்போதும் வாடாது பிரகாசிக்குமோ, அதுபோல், நீயும் தேய்வின்றி என்றும் பிரகாசத்தை அடையலாகும்' என்கிறாள்.

கட்டளைக் கலித்துறை

கொண்டலுட் சென்று மறைந்திடும்
கோலக் குளிர்மதியே

ஒண்டொடி யென்னை வருத்தாதே
சொல்வேன் ஒரு மொழிகேள்

பண்டுன் நிதந்தேயும் சாபமும்
தீரும் பரிந்தெனையாட்

கொண்டானைக் கண்டு குறை தீர்க்க
வல்லாயோ கூட்டிவந்தே.'

தெய்வ தரிசனம்

சூரிய அஸ்தமனத்தின் அற்புதத்தையோ சந்திரனின் அழகையோ நான் வியந்து போற்றுகையில், என் ஆத்மா ததாகலமுற்று அனைத்தையும் படைத்த ஆண்டவனையும் அவனது கருணை வெள்ளத்தையும் காண நான் முயற்சிக்கிறேன். ஆனால், சூரிய அஸ்தமனங்களும் சூரியோதயங்களும் அவனை நான் நினைக்க உதவாவிட்டால் அவையுங்கூட, வெறும் இடையூறுகளேயாகும். ஆத்மா உயர்ந்தெழுவதற்குத் தடையான எதுவும், வெறும் மயக்கமும் மாய வலையுமாகும். தேகமுங்கூட அப்படித்தான் பல சமயம் மோட்ச மார்க்கத்தைத் தடுக்கிறது.

— மகாத்மா காந்தி.

மிருத்யுலோகத்து நட்பு

மராட்டியில் எழுதியது
காண்டேகர்

மொழிபெயர்ப்பு
கா. ஸ்ரீ. ஸ்ரீ.

‘இரண்டு உடல், ஆனால் ஓர் உயிர்’ என்று சொல்லும்படியாகத்தான் அவர்கள் ஸ்வர்க்கலோகத்தில் பழகினார்கள். அமுதம் பருகுவதாயினும் சரி, கற்பக மரத்தின் நிழலில் சாப்பாட்டுக்குப் போவதாயினும் சரி, அல்லது பாரிஜாத மலர்களைப் பறித்து அவற்றை அப்ஸரப் பெண்களுக்கு அர்ப்பணம் செய்வதாயினும் சரி எந்த விஷயத்திலும் அவ்விருவருக்குள் வேற்றுமை ஏற்பட்டதில்லை; பொறாமை என்றுமே அவர்களைத் தீண்டியதில்லை.

அவர்களின் புண்ணிய மூட்டை ஒரே சமயத்தில் காலியாயிற்று. இருவரையும் ஒருங்கே மிருத்தியுலோகத்துக்கு அனுப்புவதென்று தீர்மானமாயிற்று. இரண்டு பேருக்கும் அதனால் ஆனந்தம். அவர்கள் தேவாதிதேவனை நோக்கி, “இறைவ, எங்களுக்கு எந்தப் பிறப்பை வேண்டுமாயினும் கொடு. ஆனால், எங்களிருவரையும் ஒரே இடத்தில், அக்கம்பக்கத்தில், வாழுமாறு பிறப்பிக்கவேண்டும். நாங்கள் இருவரும் ஒன்றாக வாழ்ந்தால், மிருத்தியுலோகத்தில்கூடத் தெய்வீக இன்பத்தைப் பெறுவோம்” என்று கேட்டுக்கொண்டார்கள்.

தேவாதிதேவன் புன்முறுவல் பூத்து, அவர்கள் வேண்டுகோளுக்கு இசைந்தான்.

* * *

அவர்கள் இருவரும் காட்டில் மரங்களாகப் பிறந்தனர். இரண்டு மரங்கள் ஒன்றோடொன்று பிணைந்து வளர்ந்தன. ஆனால் அவற்றில் ஒன்று நீளமாக வளர்ந்து அதன் கிளைகள் நாலுபுறமும் பறவின. மற்றொன்று குட்டையாகவே இருந்தது. குட்டையான மரத்துக்கு

எப்போதும் வெயில் தேவையாக இருக்கும். அது நெட்டையான மரத்தைப் பார்த்து, "அண்ணு, உன் கிளைகளைச் சற்று அந்தப்புறம் ஒதுக்கிக்கொள்ளேன்! எனக்குக் கொஞ்சமாவது வெயில் கிடைக்கும்" என்று கெஞ்சி வேண்டிக் கொள்ளும்.

நெடிய மரத்தின் கிளைகள் அதைப் பரிகாசம் செய்து கொண்டே கைகளை இங்குமங்கும் ஆட்டுவதோடு சரி! குட்டை மரத்துக்கு வெயில் கிடைக்கும்படி அது விடவே இல்லை.

நிழலில் முளைத்த அந்தக் குட்டை மரம், சீக்கிரமே வாடிக் கருகி மாய்ந்தது.

"அடுத்த பிறப்பு உனக்கு எவ்விடத்தில் வேண்டும்?" என்று தேவாதிதேவன் அதைக் கேட்டான்.

அப்போது அதன் மனத்தில் கலவரம் உண்டாயிற்று. அது வெகுநேரம் யோசனை செய்தது. கடைசியில் தன் ஸ்வர்க்கத்து நட்பை ஞாபகப்படுத்திக் கொண்டு, தன் நண்பன் மீண்டும் எங்கே பிறப்பானே அவ்விடத்திலேயே பிறப்பது என்று தீர்மானித்தது.

* * *

அவ்விரு நண்பர்களும் மான்களாகப் பிறந்தனர். காட்டில் புல்லும் நீரும் ஏராளமாக இருந்தன. இரண்டு மான்களும் வயிறு நிரம்பப் புல்லைத் தின்று நீர் அருந்தும்; இங்குமங்கும் நாட்டியமாடித் திரியும்; எழும்பி எழும்பிக் குதிக்கும். ஸ்வர்க்க சுகத்தில் மட்டும் இதைவிட அதிகமாக என்ன இருக்கிறது? ஆனால், ஸ்வர்க்கத்தில் இல்லாத ஒரு விஷயம் இங்கே இருந்தது; அடிக்கடி அவை இரண்டுக்கும் ஏதாவது ஒரு சச்சரவு வந்துவிடும். 'நம் இருவரில் யாருடைய கொம்புகள் அழகாயிருக்கின்றன?' என்பதைப்பற்றி அவ்விரண்டுக்கும் பலத்த வாதம் உண்டாகி, கடைசியில் அடிதடிச் சண்டைவரையில் போய்விட்டது.

இரண்டு மான்களும் வளர்ந்து பெரியவை ஆயின. ஒரு நாள் ஒரு பெண்மானைப்பற்றி இரண்டுக்கும் சச்சரவு வந்துவிட்டது. இரண்டுக்குமே அது திலோத்தமையைப் போன்ற அழகியாகத் தோற்றியது. ஸுந்தன்.

உபஸுந்தன் ஆகியவர்களின் கதை மீண்டும் அந்தக் காட்டில் நடக்குமோ என்று அன்றைத்தினம் எல்லாப் பிராணிகளும் பயந்தன.

ஆனால் மொத்தத்தில் இப்படி மனஸ்தாபம் உண்டாகும் சம்பவங்கள் குறைவாகவே இருந்தன.

ஒருநாள் அந்தக் காட்டில் வேடர்கள் புகுந்தனர். உயிருக்கு அஞ்சி, மிருகங்கள் யாவும் கும்பல் கும்பலாக ஓடின. நட்பில் தளைப்பட்ட அவ்விரு மான்களுங்கூட ஒன்றாக ஓடின. பிராண சங்கடத்தில்கூட ஒன்றையொன்று விடக்கூடாது என்று அவை தீர்மானித்திருந்தன.

எங்கிருந்தோ ஒரு வேடன் அவை இரண்டையும் நோக்கி வந்தான். ஒரு மான் அவனைப் பார்த்தது. ஓடிக்கொண்டே இருக்கையில் அது பட்டென்று தரையில் சாய்ந்தது. 'நம் நண்பன் செத்துப்போனான்; இனி அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை' என்று நினைத்து, மற்றொரு மான் ஓடிக்கொண்டே இருந்தது. அடுத்த க்ஷணத்தில் அந்த மானின் உடலில் அம்பு பாய்ந்தது. அப்போது தரையில் விழுந்துகிடந்த மான் உடனே துள்ளிக்குதித்து வேறு திசையை நோக்கி ஓட்டம் பிடித்தது.

செத்துப்போன மானின் ஆத்மாவை நோக்கி, "உனக்கு அடுத்த பிறப்பு எங்கே வேண்டும்?" என்று தேவாதிதேவன் கேட்டான். ஸ்வர்க்கத்து நட்பின் ஞாபகம் லேசாக அதன் மனத்தை மலர்வித்தது. தன்னைப் பின்னுக்கு இழுத்த வேறோர் எண்ணத்தை அடக்கிவிட்டு, "அந்த என் மற்றொரு நண்பனும் வரட்டும். பிறகு எங்களிருவரையும் ஒரே இடத்தில் — அக்கம் பக்கத்தில் வாழும்படி - பிறப்பியுங்கள்" என்று பதில் சொல்லியது.

* * *

அவை இரண்டும் ஒரு ராணியின் வயிற்றில் இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தன. சிறுவயசில், அந்த ராஜகுமாரர்கள் இருவருடைய பெருமையில் சிறிதும் வித்தியாசம் தோன்றவில்லை. தேவலோகத்தைப்போல

வே, இங்கும் தம்து அன்பு குன்றமலிருக்கும் என்று அவர்கள் நினைத்தனர்.

குமாரர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆயினர். இருவரில் எவனை இளவரசனுக்குவது என்ற பிரச்னை எழுந்தது. தர்மசாஸ்திரங்களின் தீர்ப்பு ஒருபுறம், அரசனுடைய தீர்ப்பு வேறு புறம், ஜனங்களுடைய தீர்ப்பு ஆனல், ஜனங்களின் தீர்ப்பைக் கேட்பவர் யார்?

சேனதிபதியின் பெண் பேரழகு வாய்ந்தவள், அடிக்கடி அரண்மனைக்கு வந்துபோவாள். ராஜகுமாரர்கள் இருவரும் தம் மனத்தை அவளுக்குப் பறி கொடுத்தனர். எவன் இளவரசனுகிருனே, அவன் தான் அவளை மணந்து கொள்ள முடியும் என்று சில நாளைக்கெல்லாம் இருவருக்கும் தெரிந்தது.

ஒரு நாள் காலையில் அரச்குமாரர்கள் இருவரும் வேட்டையாடக் காட்டுக்குப் போயினர். அரண்மனையிலிருந்து புறப்படும்போதே, அவர்கள் ஒருவரை யொருவர் குரூரமாகப் பார்த்துக்கொண்டார்கள். இருவரும் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கம்மிய குரலில், 'இன்று நமக்குப் பெரிய வேட்டை கிடைக்கும்' என்று சொல்லிக் கொண்டார்கள்.

மாலையில் இரண்டு ராஜ குமாரர்களின் பிணங்கள் அரண்மனைக்குக் கொண்டுவரப்பட்டன. இருண்ட அடர்ந்த புதருக்குள் பதுங்கியிருந்தமையால், அருகில் ஏதோ காட்டு மிருகம் இருக்கிறது என்று எண்ணி, இருவரும் ஒரே சமயத்தில் அம்பு எய்தனராம்! இரண்டு அம்புகளும் குறிதவருமல் பாய்ந்தன!

* • *

தேவாதிதேவன் அவ்விரு ஆத்மாக்களையும் நோக்கி, "உங்களுக்கு அடுத்த பிறப்பு எங்கே வேண்டும்?" என்று கேட்டான்

இருவரும் ஒரே சமயத்தில், "எங்கே இருந்தாலும், சரி; ஆனல் ஒருவரை விட்டு மற்றவர் தொலைவில் - வெகு தொலைவில் - இருக்கவேண்டும்!" என்று கூவினர்கள்.

"அசலம்"

வரகவி வராகசாமி

வீதிவழி வந்தவொரு கவியிடத்துத் தன்விருப்பம்
ஆதியுடன் அந்தமாக அறைந்திடவும் அவர்தாமே
"நீதிநூல்கள் ஓதினையோ? நிகண்டும் படித்தனையோ?
சேதிசொல்''லெனக் கவிராயர் செப்பவே, சீடனுந்தான்

பீதியே மிகக்கொண்டு பேந்தவே விழித்திட்டு
பாதியிலே நழுவிவிடப் பார்க்கையில் பாவலர்
"போதியோநீ? பொறுத்திடுக! புகன்ற நீதியுநிகண்டும்
ஓதியதில்லை யானே ஓடாதே" எனஉரைத்தார்.

"விதியது வேணதில்லை விளம்பிடக் கவிபலவே
மதிஇருப்பின் போதும் இம்மாநிலத்துக் கண்ணே
ததிதோம் தைந்தாமெனவே மோனையும் மனத்தில்
உதித்ததோர் எதுகையும் உளரிடக் கவிவருமே!"

வகையிதென்று தெரிந்துகொண்ட வராகன் மனைசென்றான்;
புகைபிடித்துப் பொடிபோட்டுப் பொலிவு சுறுசுறுப்பாய்,
நகைமிகுத்து நாலுதுயர் நோட்டெடுத்தான்; அவிழ்ந்த
சிகைதட்டி முடித்த பின்பு சிவாயநமவென வரைந்தான்.

ஆனையென ஆரம்பித்தான் அடிதான் எழுதியதும்
மோனையும் மொழியும்மிக முரண்கொள முந்தியதை
ஏனையென்ற மாற்றஎதுகை இறந்ததுவே; இன்னிலையில்
பானையொன்று இத்தருணம் பட்டதவன் கண்ணில்.

தக்கபொருள் என்றதனைத் தாராளமாய்ப் புகழ்ந்து
முக்கிமுனகி மூன்றுவரி எழுதினான்; உவந்திட்டான்.
பக்கங்கள் இதற்குள்ளே பதினாறு ஆயினவாம்;
இக்கட்டு எவைவரினும் இக்கவி முடிப்பனென்றான்.

கவிவேகம் குறைந்தது; கனதாகம் நிறைந்தது;
கவினுறு வானத்துக் கதிரும் மறைந்தது;
குவிந்த தாட்களைக் கோவையாய்க் கட்டியொரு
நவையில் பாடலை நாளையே பாடுவனென்றான்.

கே. விஜயராகவன்

நோரா ரிச்சார்ட் என்ற மேல்நாட்டுக்காரி ஒரு சமயம் இந்தியாவுக்கு வந்திருந்தாள். இந்தியா முழுதும் சுற்றிப் பார்த்தாள். அவள் சொன்னாள், 'இந்தியாவிலேயே என் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தவை மூன்று பொருள்கள். அவைகள் கட்டைவண்டி, கைராட்டினம், சேந்து கிணறு' என்று.

இதைப் படித்தபோது யாரோ என் உள்ளத்தில் உள்ளதொன்றை தொட்டுக்காட்டிய மாதிரி இருந்தது. எனக்கென்னவோ அவளைப்போலவே இம்மாதிரி கர்நாடக விஷயங்களில் தான் பற்று. கட்டை வண்டிப் பயணம் என்றாலே எனக்கு ஒரு தனி இன்பம். ஒரு நல்ல நிலா இரவிலே மனமொத்த நண்பர்களோடுகட்டை வண்டியிலே ஆடி அசைந்து கொண்டு உல்லாசமாகப் பேசிக்கொண்டு போவதிலே உள்ள இன்பத்துக்கு ஈடு வேறு எதைச் சொல்லலாம்!

மாடுகளின் கழுத்தில் கட்டிய மணிகளின் நாதமும், சலங்கைகளின் ஒலியும் நம்மை ஒரு தனி உலகில் அல்லவா கொண்டுபோய் விடும். நாலு வண்டிகள் சேர்ந்து போகும்போது வண்டிக்காரர்கள் ஒருவருக் கொருவர் தங்கள் பாடு பரப்புகளைப் பேசி வேடிக்கை செய்வதைக் கேட்பதே ஒரு அருமையான அனுபவமாகும். எத்தனை கதைகள், எத்தனை தமாஷுக்கள் சொல்லத்தரமில்லை.

என் நண்பரொருவர் தன் அனுபவத்தைச் சொன்னார். அவர் கலியாணமாகி பெண்ணும் மாப்பிள்ளையும்

ஒரே வண்டியில் புறப்பட்டாலுங்கூட வண்டிக்காரன் எதிரில் அவர்கள் பேசவும் - ஏன் பரஸ்பரம் பார்த்துக் கொள்ளவும் - வெட்கப்பட்டார்களாம். ஆனால் வண்டி மேடுபள்ளங்களில் ஏறி இறங்கும்போது ஒருவருக்கொரு வர் எதிர்பாராதவண்ணம் மோதிக் கொள்வார்களாம்.

அடடா! அப்படி மோதிக் கொண்ட போது அவர் அனுபவித்த இன்பத்தை சொல்லச் சொல்ல ஒரே இன்ப வெள்ளத்தில் மூழ்கிவிடுவார். இது நெடுநாளைய சம்பவம்தான். ஆனால் அவர் இன்றும் அதைச் சொல்லும்போது அந்த இன்பத்திலே தம்மையும் ஒருக்கணம் மறந்து விடுவார்.

கிராமங்களிலே கலியாணங்கள் நடக்கும். மாப்பிள்ளை பெண்வீட்டுக்குப் புறப்படுவார். கலியாணத்துக்கு முன்னதாகவே மாடுகளைத் தயார் செய்து வைத்திருப்பார்கள். மாடுகளுக்கு சதங்கை மாலைகள் போட்டிருப்பார்கள். இருபது முப்பது வண்டிகள் புறப்படும். சதங்கைகள் கலகலவென்றொலிக்கும். ஒரே கோலாகலந்தான்.

இந்தக் காலத்திலே அந்தக் கட்டைவண்டிகளைப் பற்றி யார் நினைக்கிறார்கள்? கால வேகத்திலே வாழ்க்கையும் அதை யொட்டி வாகனங்களும் துரிதமாக முன்னேறின.

ஆனால் நாம் இன்று என்ன காண்கிறோம்? நவீன துரித இயந்திர சாதனங்களால் இன்று உலகத்திற்கு ஏற்பட்டிருக்கும் தீமையை நினைக்கும்போது நடுங்கத்தான் வேண்டியிருக்கிறது. அக் காலத்தில் கட்டை வண்டிப் பயணத்தைப் போல வாழ்க்கையும் வேண்டியிருந்தது. இன்று எங்குபார்த்தாலும் 'மோட்டார் எமன்' என்று சொல்வார்களே அது காட்சியளிக்கிறது. வழியில் போகும்போதும் வரும் போதும் உயிரை பத்திரப் படுத்திச் செல்ல வேண்டியிருக்கிறது. கொஞ்சம் தவறினால் அந்த வேகத்திலேயே உயிரும் சென்று விடுகிறது. இன்னும் எவ்வளவோ விதவித விசித்திரங்கள். இதெல்லாம் மறைந்து, வாழ்விலே பசுமை பூக்க வேண்டுமானால் மனப் பக்குவம் அவசியம் தேவை. ஆனால், மனப்பக்குவம் விலைக்கு வாங்கும் சரக்கு அல்லவே!

தமிழ் எழுத்தாளர் மகாநாடு

தமிழ் எழுத்தாளர்கள் மகாநாடு கூடிய விரைவில் கோவையில் ஸ்ரீ டி. எஸ். சொக்கலிங்கம், 'தினசரி' ஆசிரியரவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இந்த மகாநாட்டை நடத்தி வைக்கும் பணியை கோவை ஜில்லா தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சங்கம் தோன்றிய மூன்று மாதங்களுக்குள்ளேயே அது ஒரு பெரும்பணியைச் செய்யவேண்டும் என்றால் அதற்கு எவ்வளவோ பொருள் ஒத்தாசை தேவையிருக்கும் அல்லவா? உங்களிடம் பொருள் உதவி வேண்டிவரும் எழுத்தாளர்களுக்கு இயன்றளவு உதவி செய்யுங்கள். குறைவாயிருந்தாலும் அதிகமாயிருந்தாலும் பாதகமில்லை! அன்புடன் கூடிய உங்கள் நன்கொடையே தேவை!

நிதியாளர்,

கோ. ஜி. த. எ. சங்கம், கோவை.

சுகந்தா சமூக சம்பந்தமான நாடகம்

ஆசிரியர்:— S. R. சாரங்கன்

விலை. — 12 அணா

சிந்தாமணி பப்ளிகேஷன்ஸ், ராஜவீதி, கோவை.

நல்ல உணவுக்கு நண்பன் நல்ல ஊறுகாய்

எலுமிச்சம் பழம், நாரத்தங்காய், மாங்காய், இஞ்சி, குறுமிளகு, நெல்லிக்காய் முதலியவைகளைக் கொண்டு, உயர்ந்த முறையில், சுத்தமாகவும், கெடாமல் நீடித்து உபயோகப்படவும் தயாரிக்கிறோம்.

துர்க்காஸ் மிக்சர் ஊறுகாய்கள், குணம், மணம், மதிப்புக்கு பேர் போனது.

C. R. துர்க்கா லாலா ஊறுகாய் கம்பனி,
முனிசிபல் ஆபீஸுக்கு எதிர்புறம்,
கோயமுத்தூர்.


பவுன் - வெள்ளி - வைர
நகைகளுக்கு
டீ. சுப்பராஜ்
கடை வீதி
கோயமுத்தூர்.
ஜெகதீஸ்

ஆரோக்யத்திற்கு உற்ற
நண்பன்.
பல வியாதிகளுக்கும்
நிவாரணம் வேண்டுமா?
மேகராஜாங்க
எண்ணெய்
விவரங்களுக்கு :-
மைசூர் வைத்தியர்
டாக்டர் V.R. ராஜாராவ், சிங்காநல்லூர்.
JAGADISH

Kesari & Co., Opp. Union High School, Coimbatore

நோட்டு புஸ்தகங்கள் ஹேர் ஆயில்
சிலேட்டு, பென்சில் ஸ்னோ, பவுடர்
இங்கி, ரப்பர் கண்ணாடி, சீப்பு
மற்றும் செண்ட், சோப்பு, பிரஷ் கிடைக்கும்.

கேசரி & கோ., யூனியன் ஸ்கூல் எதிர்புறம். கோயமுத்தூர்.

For Your Requirments of:—

Designs, Photo Slides & Blocks, etc.

Enquire at:-

INDRA PROCESS STUDIO,
Opp. Municipal Buildings,
COIMBATORE.

கெட்டி சாயம் மலிவானவிலை

கைத்தறி ஆடைகள்

ஷர்டிங், கோடிங், வேஷ்டிகள் & புடவைகள் பல
பார்டர்களில் உயர்ந்த ரகங்களில்
கிடைக்குமிடம்.

மணியம் ஜவுளிக்கடை

90, ராஜ வீதி :: கோயமுத்தூர்

பாய்கள்

மிருதுவான கோரைகளால் தயார் செய்யப்
படும் சாதா **கோரைப்பாய்கள்,**

வசிகரமான டிசைன்களுடன், கலர் வேலைப்
பாட்டுடன் **பட்டுப்பாய்கள்**

மொத்தமாகவும் சில்லரையாகவும்
எங்களிடம் கிடைக்கும்

மெஸர்ஸ். பி. ஆர். சுப்ரமணியம்
டி. என், ராமச்சந்திரன்
கமிஷன் ஏஜண்டுகள்,
90; ராஜவீதி, கோவை.

EXPRESS BOBBIN WORKS
QUILON.

Manufacturers of

All Sorts of Bobbins
Wooden Accessories etc.,
for Mills

Local Enquiries to:

K. APPU

4/42 Trichy Road,
COIMBATORE.

உங்களுடைய சந்ததியாருக்கு நீங்கள் எவ்வளவு செல்வம் சேமித்து வைத்திருந்தாலும் உங்களுடைய பொறுப்பும், கடமையும் தீர்ந்து விட்டதா? இல்லை. உங்கள் இல்லத்தில் மங்களகரம் நிலவுவதற்கு **திருமகள்** நிரந்தரவாசம் அத்யாவசியமல்லவா ?

உங்களுக்கு விருப்பமான விஷயங்களைத் தாங்கி வாரந்தோறும் வெளிவருகிறாள்

"திருமகள்"

தமிழ் வாரப் பத்திரிகை

சந்தா விபரம்

வருட சந்தா	6—0—0
தனிப் பிரதி	0—2—0

திருமகள் காரியாலயம்,
17/38, ராஜவீதி,
கோயமுத்தூர்.

மாதிரிப் பிரதி கண்டிப்பாய் அனுப்ப முடியாது.

தென்னாட்டின்

உத்திரவாதமுள்ள நகை வியாபாரிகள்

தந்தி: "ராஜா" போன்: 218A

வைரம், தங்கம், வெள்ளி ஆபரணங்கள்.

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்,

கோயமுத்தூர்.

ஜுவெல் பிரஸ், கோயமுத்தூர்.